முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.16.03.2026

O.S. No.93/2015

பி.வா,சா-1 சண்முகநாதன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நானும் 2 ,3 பிரதிகளும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரி. எனது அண்ணன் பாலசுப்பிரமணியன் சென்னையில் வேலை பார்க்கிறார். என் அம்மா அப்பா என்னுடன் குடியிருக்கிறார் என்றால் சரி. என் அம்மா 26.11.2023 ல் இறந்தார். 2023 க்கு முன்பாக என் அம்மா உடல்நலம் சரியில்லாமல் இருந்தார் என்றால் சரி. 3 வருடங்களாக உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். 2013 க்கு முன்பாகவே என் அம்மா உடல்பலவீனமாக இருந்தார் என்றால் சரியல்ல. 2013 ம் வருடத்தில் என் அம்மா வந்து ஏதாவது காரியத்தில் ஈடுபட்டாரா என்றால் வந்துள்ளார். வா.சா.ஆ 38 செட்டில்மென்ட் எழுதுவதற்கு துளசி பத்திர அலுவலத்தை அணுகினார். தேதி ஞாபகமில்லை அவராகவே நேரடியாக அணுகினார். பத்திரத்தை அவர்கள் பெயரிலேயே வாங்கினார்கள் என்ன தொகை என்று எனக்கு தெரியாது.

செட்டில்மென்ட் பத்திரத்தை எழுதி பதிவு செய்வதற்கு முன்பாக அனுமதி பெற்றாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் 2 ம் பிரதி நாகர்கோவில் வந்தாரா என்றால் இல்லை சென்னையில் இருந்தார். வா.சா,ஆ.38 செட்டில்மென்ட் ஆவணம் எழுதியபோது 2 ம் பிரதி சென்னையில் இருந்தார் நாகர்கோவில் வரவில்லை. வா.சா,ஆ.38 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை யார் யார் கையொப்பம் செய்தார் என்று ஞாபகமில்லை. வா.சா,ஆ.38 எழுதும்போது நான் வள்ளியூரில் இருந்தேன். என் அம்மாவிற்கு வா.சா,ஆ.38 ஆவணத்தை எழுதி ஏற்பாடு செய்தது நாகர்கோவிலில் வேறு ஒரு நபர் என்றால் எனக்கு தெரியாது. என் அம்மாவிற்கு தனிப்பட்ட முறையில் வருமானம் ஏதும்

இல்லை என்றால் சரி. வா.சா,ஆ.38 க்கான பத்திரங்களை 2 ம் பிரதியின் பெயரில் வாங்கி வேறு ஒரு நபரால் அது பத்திரபதிவிற்கான ஏற்பாடுகள் செய்யபட்டது என்றாலும் என் அம்மாவிற்கு வா.சா,ஆ.38 ன் சங்கதிகள் தெரியாமலேயே கையொப்பம் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

வா.சா,ஆ.38 ஆவணம் என் அம்மாவால் சுயமாக விருப்பபட்டு முடிவு செய்து எழுதிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எல்லோரையும் கலந்து பேசி முடிவு எடுத்து எழுதிய ஆவணம் ஆகும். என்அம்மா என் ஆதரவில் பல வருடங்களாக இருந்ததால் என் பேச்சை தட்டமுடியாமல் வா.சா,ஆ.38 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா,ஆ.38 ஆவணத்தை 2 முதல் 4 பிரதிகள் எழுதி தயார் செய்து எழுதி என் அம்மாவிடம் கட்டாயபடுத்தி கையொப்பம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா,ஆ.38 ன் எல்லா விவரங்களும் தவறானவை என்றால் சரியல்ல. வா.சா,ஆ.38 ன் ஒவ்வொரு பக்கத்திலும் வித்தியாசம் வித்தியாசமாக கையொப்பம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா,ஆ.38 ஆவணத்தை தயார் செய்வதற்கு என் அம்மா நாகர்கோவில் வரவில்லை என்றாலும் பதிவு செய்த அன்று மட்டுமே வந்தார் என்றாலும் வா.சா,ஆ.38 ல் உள்ள சாட்சிகள் முன்பாக என் அம்மா கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

வா.சா,ஆ.39,40 ஆவணங்கள் ஒரே பத்திர அலுவலகத்தில் தான் தயார் செய்ததது என்றால் சரி. அந்த ஆவணங்களில் வா.சா,ஆ.38 ஆவணத்தின் சங்கதிகள் அப்படியே சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் சொத்தின் எல்கைகள் மட்டும் மாறும். அந்த ஆவணங்களுக்கு நானும் எனது சகோதரர்களும் ஏற்பாடு செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களுக்கு யார் சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் யார் ஏற்பாடு செய்தார்கள்

என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. பட்டிகை சொத்திற்கு பின்னாடி உள்ள நபரே துளசி பத்திர அலுவலகத்திற்கு சென்று வா.சா,ஆ.38 முதல் 40 வரையான ஆவணங்களை ஒரே மாதிரி தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த 3 ஆவணங்களும் போலியாக தயார் செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த 3 ஆவணங்கள் அடிப்படையில் எனக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல.